# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :25 January 2025
கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members
**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**
Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**
Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்
தெ.மதுபாலா

தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்
கோ. கோகிலா

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்
முனைவர்.வி.சேகர்

ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு
கோ. கோகிலா

ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்
த.கல்பனா

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்
கு.கலையரசி

ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்
மு.கௌசல்யா

சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்
முனைவர் வெ. நளினி

பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்
வீ. மஞ்சு

குறுநில மன்னா˙களின் பொருளாதாரநிலை
மு. சதீஸ்குமார்

கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்
மு.கனகவள்ளி

காப்பியங்களில் மரபுக்கருவிகள்
வீ.விஜயலட்சுமி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்**
முனைவர் சா.இன்குலாப்

**தேவிபாரதியின் "உயிர்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு**
S.Priyadharshini

**விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை**
முனைவர் கு.புஷ்பாவதி

**அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.**
திரு.கு.ரவிச்சந்திரன்

**பாரதிதாசனின் பெண்ணுலகம்**
கா. கவிதா

**பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்**
நா.ரஹமத் நிஷா

**“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை**
மு. வசந்தி

**நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்**
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

**கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி**
நா.சௌந்தர்யா

**Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks**
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**Lakśana and Lakśya in Music**
**Srivaramangai Sadagopan**

**சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்**
**ச. காயத்ரி தேவி**

**Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions**
**Ms. Janaki Sadagopan**

**தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து**
**கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்**

**திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை**
**பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்**



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.

*Revolutionory Libral Political Theatre in C.N.Annathurai̇ s Theatrical Scripts and Performances A Study.*

திரு.கு.ரவிச்சந்திரன்,சிரேஷ்டவிரிவுரையாளர்,நுண்கலைத்துறை,
கலைகலாசாரபீடம்,கிழக்குப்பல்கலைக்கழகம்,இலங்கை.

*Mr. K. Ravichandran, Senior Lecturer, Department of Fine Arts, Faculty oF Arts & Culture, Eastern University, Sri Lanka*

***Abstract.***

*Drama is viewed into two bases. One is creating and other one is performing it. The viewers watch only the performance at the most. The sense perception is the core of the drama performance. There is no society without dramatic cultural influences. Hence, drama is inevitable artistic tradition in all countries and all cultural societies. The recent researches attempt to write the history of drama based on the grammar and literature of dramas. It may the reason be that in early periods, dramas were considered as literature rather a performance. It can bring more information to the art world by seeing the drams by its history, its aesthetic elements and the so forth. On the basis, dramas of C.N. Annathurai have been viewed as a literature than viewing as a performance from since his creation of the said dramas. The hypothesis includes that the dramas were written by C. N. Annathurai in order to perform and these dramas have all performing elements including theatrical essence. His dramas are reviewed as revolutionary trend against European colonized nature. Later on bring the society to the liberty form the social injustice. Based on the progress, he attempted to create a political party to apply his political goal for the sake for the people. Social liberty of the people for him is to educate them to revolutionize from the slavery of colonialism. To encapsulate the liberty of the people and remove all injustice, C. N. Annathurai created his dramas. This change in the theatric trend is becoming a new trend called Revolutionary Liberal Theatre. In the history and scope of theatre, it is a new beginning in the tradition of theatre and drama. ;*

***Key words**: Society, liberty, revolution, Dramatic script, creation of drama.*

**ஆய்வுச்சுருக்கம்**

நாடகம் என்பது செய்து காட்டப்படுவது. செய்து காட்டப்படுவதையே பார்வையாளர்கள் பார்க்கின்றனர். ஆகவே நாடகத்தின் பிரதான விடயப்பரப்பு கட்புலனாகுதலாகும். உலக அரங்க வரலாற்றில் நாடகப் பண்பாடு இல்லாத சமூகங்களைக் காணமுடியாது. ஆகவே எல்லா நாடுகளிலும் எல்லாப் பண்பாடுகளிலும் நாடகம் என்கின்ற கலை வடிவம் மனித வாழ்வின் மிக முக்கியமான சக்தியாக இருந்து கொண்டிருகின்றது.

அண்மைக்கால நாடகவியல் ஆய்வுகள் நாடக இலக்கணங்களையும், நாடக இலக்கியங்களையும் வைத்துக்கொண்டு நாடக வரலாற்றை தெரிவு செய்து எழுதமுனைகின்றது. ஆரம்ப காலங்களில் நாடகம் என்பது நிகழ்த்துகையாகப் பார்க்கப்படாமல் இலக்கியமாகப் பார்க்கப்பட்டதும் இதற்கு ஓர் காரணமாக இருக்கலாம். நிகழ்த்தப்படும் நாடகங்களின் வரலாறு, நிகழ்த்துகை முறை, அதன் அழகியல் அம்சங்களுக்கூடாக பார்க்கப்பட்டு ஆய்வுசெய்து நாடக வரலாற்றை எழுத அல்லது பதிவு செய்ய முயலுகையில் இன்னும் பல தகவல்களை உலக அரங்கப்பார்வைக்கு கொண்டுவர முடியும்.

இத்தகைய அடிப்படையில் சி.என்.அண்ணாத்துரையின் நாடகங்கள் அவரது படைப்பாக்கக் காலத்தில் இருந்து இன்று வரை நிகழ்த்துகையாக பார்க்கப்படாமல் அது நாடக இலக்கியமாக பார்க்கப்பட்டது. ஆனால் சி.என்.அண்ணாதுரை அவர்களால் எழுதப்பட்ட நாடகப் பனுவல்கள் நிகழ்த்தப்படுவதற்காக எழுதப்பட்டவை என்பதும் அதில் நிகழ்த்துகைக்குரிய முழு அரங்கியல் கூறுகளையும், அது சார் அழகியல் அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. என்ற கருதுகோளின் அடிப்படையில் சி.என்.அண்ணாத்துரையின் நாடக எழுத்துருக்களை அவரது நாடகவியல் சார் அணுகுமுறைகளுக்கூடாக கண்டுகொள்வதும்,

ஐரோப்பிய காலனிய ஆதிக்க சக்திகளின் கெடுபிடிகளில் இருந்து விடுதலை பெறவும் விடுதலை பெற்றதன் பின்னர் சமூகங்களுக்கிடையே காணப்பட்ட சமூக சீர்கேடுகளை நீக்கவும் தென்னிந்திய மக்களுக்கென்று ஒரு கட்சி அரசியலை உருவாக்க அவர் கையாண்ட ஓர் ஆயுதமாக சமூக விடுதலை அரங்கைப் பார்க்கமுடியும். சமூக விடுதலை என்பது காலனித்துவத்திற்கு உட்பட்டு இருந்த காலத்தில் அதிலிருந்து விடுதலை பெறுவதற்காக நாடகங்களுக்கூடாக அறிவூட்டலையும், காலனித்துவத்திலுருந்து விடுதலை பெற்றதன் பின்னர் சமூகங்களில் காணப்பட்ட சமூகச் சீர்கேடுகளை நிவர்த்தி செய்யத்தக்க விதத்தில் நாடகங்களைக் கையாண்டமை சி.என். அண்ணாவின் மறுமலர்ச்சி விடுதலை அரங்காக பரிணமித்து இன்று வரை நாடகவியலில் ஓர் முக்கிய விடயப்பரப்பை எமக்கு இணங்காட்டியுள்ளது.

**திறவுச் சொற்கள்:** ***சமூகம், விடுதலை, மறுமலர்ச்சி, நாடகப்பனுவல்கள், நாடகவாக்கம.***

**முன்னுரை**

பேரறிஞர் சி.என்.அண்ணாத்துரை அவர்கள் கலை உலகில் மிக முக்கியமான ஆளுமைகளில் ஒருவர் தென்னிந்திய சூழலில் இந்தியா சுதந்திரமடைவதற்கு முதலும் பின்னரும் காலனியவாதிகள் விதைத்து விட்டு சென்ற தீண்டாமை, சாதி, இனமதவெறித்தன்மை, ஆரிய ஆதிக்கப் போக்குகள் திராவிடத்தை புறந்தள்ளும் நோக்குகள் அனைத்துக்கும் எதிரானதாக தனது கருத்தை மேடைப் பேச்சுகளிலும் பிரச்சார செயற்பாடுகளிலும் கலந்து கொண்டு வெளிப்படுத்தியவர். இருப்பினும் அவை மக்களை நேரடியாகவும் உடனடியாகவும் திசை திருப்ப ஓர் கருவியாக நாடக நெறிமுறைகளைப் பின்பற்றி பிரச்சாரங்களை புரிந்தவர்.

இவர் நடிப்பதற்கும் வாசிப்பதற்கும் ஏற்ற விதத்தில் நாடகப் பனுவல்களை எழுதியவர். நாடகத்திற்கு புதிய மொழிக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியவர். மொழிக் கட்டமைப்பு இதுவரை காலமும் இலக்கியமாக எழுதப்பட்டிருந்த நாடகப் பனுவர்களை மாற்றி நாடக இலக்கண விதிமுறைகளுக்கு ஏற்ப சாதாரண மொழி நடையில் பாமரனும் விளங்கிக் கொள்ளும் விதத்தில் அமைத்தார். உரைநடைகளை விலக்கி சாதாரண ஒலிக்கட்டமைப்பு முறையினைப் பின்பற்றி நாடகப்பணுவல்களை நிகழ்த்துகைக்குரியதாக எழுதினார். இத்தகைய நாடகங்கள் நிகழ்த்துவதற்கும் வாசிப்பதற்கும் பொருத்தமானதாக அமைந்திருந்தன. இவர் நாடகத்தை ஒரு

வரன்முறையாக கற்காத காலத்திலும் அவரது நாடகங்களில் நாடகப்படைப்பாக்கத்திற்கான அழகியல் அம்சங்களைக் கொண்டிருந்தமையை இவ்வாய்வினூடாக நிலை நிறுத்தத்தக்கது.

**ஆய்வின் நோக்கம்**

இவ் ஆய்வு சி.என்.அண்ணாத்துரையின் நாடகப்பனுவலுக்கூடாக தெரியவரும் நாடகவாக்க அழகியல் நுட்பங்களைக் கண்டுகொள்வதும் நிகழ்த்துகைப் பனுவல்களுக்கூடாக காணப்படும் சமூக மறுமலர்ச்சி, விடுதலை, அரசியல் பிரச்சார செயற்பாடுகள்இ புதிய அரசியல் கலாச்சாரத்தைக் கொண்டு வருவதற்காக அரங்கைப் பாவித்தமை ஓர் அரசியல் கட்சி உருவாக்கமும் நாடகத்திற்கூடாக இடம் பெற்றது என்பதைக் கண்டுகொள்வதும் ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் கருதுகோள்**

சி.என்.அண்ணாவின் நாடகங்கள் எழுத்துருவாகவும் நிகழ்த்துகையாகவும் இன்றுவரை அரங்கேற்றப்படுகின்றன. அண்ணாவின் நாடகங்களில் ஓர் நாடகக் கட்டமைப்பும் அவர் வெளிப்படுத்திய நாடக நுட்பங்களும் கருப்பொருள்களும் சமூக மறுமலர்ச்சிக்காகவும் விடுதலைக்காகவும் தென்னிந்தியச் சூழலில் திராவிடக் கொள்கையோடு இணைந்த அரசியல் கட்சி ஒன்றின் பிரவேசத்திற்கான மறுமலர்ச்சி அரங்கைப் பரிணமித்துள்ளது என்பது ஆய்வின் கருதுகோளாக உள்ளது.

**ஆய்வுப்பிரச்சினை**

சி.என்.அண்ணாவின் நாடகப்பனுவலாக்கம் நாடகவியல் அடிப்படைகளைப் பேணுகின்றதா?

சி.என்.அண்ணாவின் நாடகப் பனுவல்களுக்கூடாக ஒரு நாடகவாக்கக் கட்டமைப்பும் நாடகவியல் நுட்பமுறைகளும்இ அது சார்ந்த அழகியல் அம்சங்களும் சமூக மறுமலர்ச்சி சார்ந்ததாகவும் விடுதலை சார்ந்ததாகவும் அமைந்திருந்ததா? ஏன்பது ஆய்வுப் பிரச்சினையாகும்.

இவரது நாடக நெறிமுறையில் சமூக மறுமலர்ச்சி அரசியல் மறுமலர்ச்சி சமூக விடுதலை அரங்காக மேற்கிளம்புகின்றதா? என்ற பிரச்சினைகளை முன்னிறுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு ஒரு பண்புசார் ஆய்வாக அமைவதால் பண்புசார் பகுப்பாய்வு முறை பின்பற்றப்பட்டது. இதற்கான உத்திகளாக விபரண ஆய்வு முறை பின்பற்றப்பட்டது. அண்ணாவின் பதினொரு நாடகப்பனுவல்களும் வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

**ஆய்வுக்கான பரிந்துரைகள்**

சி.என். அண்ணாவின் நாடகக்காலம்

சி.என்.அண்ணாவின் நாடகக் காலத்தை அறிவதற்கு முன்னர் தென்னிந்திய நாடக வரலாற்று காலத்தை அறிவது அவசியமாகின்றது. தென்னிந்திய அரங்கச் சூழலில் பாரம்பரிய அளிக்கைகள்இ நவீன அளிக்கைகள் என இரண்டு தளத்தில் கால ஒட்டத்தில் அரங்கு தனது வரலாற்றை நிலைநிறுத்துகின்றது.

பாரம்பரியம் என்பது மக்களின் பண்பாட்டில் இருந்து எழுகின்ற பிரதேச அடிப்படையில் பரந்துபட்டு கிடக்கின்ற நிகழ்த்துகைகளைக் குறிக்கின்றது. இத்தகைய பாரம்பரிய அளிக்கைகள் அதன் நிகழ்த்துகை தளத்தில் இருந்து மூன்று நிலைகளில் மாறுபட்டுச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது. இதில் முதலாவது நிலை பாரம்பரிய அளிக்கைகள் மக்களின் நேரடி தொடர்போடும் பண்பாட்டோடும் எழுகின்ற பூர்வீகத் தன்மை கொண்ட நிகழ்த்துகைகள். இரண்டாவது நிலை கற்றறிந்தோர்களின் இணைவோடு மறுமலர்ச்சி கண்ட பாரம்பரிய நிகழ்த்திகைகள். எடுத்துக்காட்டாக கோவிந்தசாமி, சங்கிரதாஷ; சுவாமிகள், முத்துசாமி கவிராஜர், பே.சுந்தரம்பிள்ளை, சூரியநாராயண சாஸ்திரிகள் போன்றோர் மேடையிட்ட நாடகங்கள். மூன்றாவது நிலை மறுமலர்ச்சியில் இருந்து வளர்ந்து சபாக்கள், நாடக மன்றங்களுக்கு ஊடாக வளர்ந்த புத்துணர்வு கண்ட நாடகங்கள் .இதற்கு வித்திட்டவராக பம்மல் சம்மந்த முதலியார் குறிப்பிடத்தக்கவர்.

பம்மல் சம்பந்த முதலியாரே முதல் முதலில் செய்யுள் வடிவில் இருந்த நிகழ்த்துகைகளை சொல்லாடல் மரபையும் உரைநடை மரபையும் நாடகத்திற்குள் புகுத்தி புதுமை கண்டவர். (சேரன்.மு. 1996-263)

இத்தகைய அறிமுகங்களும் வளர்ச்சிப் போக்குகளும் பாரம்பரிய நிகழ்த்துகைகளுக்கு இருப்பினும் அவை மக்கள் மத்தியில் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. ஏனெனில் இங்கு பேசப்பட்ட கதைக் கருக்கள் புராண இதிகாச சமயம் சார் கதைகளாக இருந்ததனால் மக்கள் சலிப்படைந்தனர்.

இந்திய காலனிய ஆட்சிக் காலத்தில் விடுதலைக்காக நாடக்கத்தை கையாண்ட வரலாறும் அக்காலத்து வரலாற்று நாயகர்களின் பெயர்களும் அரங்க வரலாற்றில் பேசப்பட்டாலும் அத்தகைய நாடகங்கள் புராண இதிகாச சமய அனுட்டானங்களுக்கூடாகவே விடுதலைக் கருத்துக்கள் மறைமுகமாக வெளிப்பட்டது என்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்க ஒன்று.

இந்தியா சுதந்திரம் அடைந்ததற்கு பின்னர் காலனியம் விதைத்த விதைகளான ஆரியமயமாக்கம், தீண்டாமை, சாதிப்பிரிவு, பெண் அடிமைத்தனம், திருட்டு, கொள்ளை வழிப்பறிக் கப்பம், முதலாளித்துவ ஆதிக்கம், ஜமீன்தார் முறையும் அதன் கெடுபிடிகளும் வளர்ந்திருந்த காலத்தில் தமது திராவிட இயக்க கொள்கைகளுக்கூடாக மக்களை நல்வழிப்படுத்த நாடகத்தை ஒரு கருவியாக கையாண்டார். இவரது நாடகங்கள் மறுமலர்ச்சி விடுதலை அரங்கை நோக்கி நகர்ந்தது. மேடைக்குரிய நிகழ்த்துகைப் பிரதிகளை உருவாக்கி சிறந்த நாடகப் பனுவல்களை எமக்குத் தந்தது மட்டுமல்லாமல் நாடக மன்றங்களுக்கும் நெறியாளர்களுக்கும் வழங்கி மிகை உணர்வு இயற்பண்பு யதார்த்த பாணியில் தமிழ் நாடகங்களைத் தந்து நிகழ்த்துகைகளுக்கு ஏற்ற விதமாக நன்கு வடிவமைக்கப்பட்ட நாடக முறைமை ஒன்றினை வழங்கினார்.

**அண்ணாவின் நாடகங்கள்**

அண்ணாவைப் பொறுத்தவரை நாடகங்களை முற்போக்கு சிந்தனைத் தளத்தில் நின்று எழுதினார். அவரும் ஒர் நடிகராக இருந்து நாடகங்களை மேடையிட்டவர். சொற்பொழிவுகள், மேடைப்பேச்சுகள், நாவல்கள், சிறுகதைகள், சிறுஇதழ்களின் வெளியீடுகள் அனைத்தும் நீண்ட

நேரம் செய்கின்ற பணியினை நாடகம் குறுகிய நேரத்தில் செய்துவிடும் என்ற அடிப்படையில் நாடகப் பனுவல்களை உருவாக்கி அதனை நிகழ்த்துகைக்காக மக்ககளுக்கு வழங்கினார்.

நாடகம் என்பது நள்ளிரவு சத்தமல்ல-நடையாலும் வழியாலும் மொழியாலும் அரைத்தூக்கத்தில் இருப்பவர்க்கு ஆனந்தம் தர முயற்சிக்கும் வெறும் ஆடல் பாடல் அல்ல. நாடகம் இன்று நாட்டுக்கு ஒரு நல்லாசானாக முன்வந்திருக்கின்றது. துணிவுடன் நாட்டு நலிவு நீங்கி நல்வழிகண்டுஇ நல்வாழ்வு வாழச்செய்யும் எளியதும் நம்பகமான பலனளிப்பதுமான சாதனம் இந்த நாடகக் கதை தான் என்பது உலகம் கண்ட மெய்மை.(சண்முகசுந்தரம்இ சு.(2001)-52)

இவரது நாடக எழுத்துருக்களை இரண்டாக வகுக்க முடியும்.

| **பெரு நாடகம்** | **சிறு நாடகம்** |
|---|---|
| 1.சந்திரோதயம் | 1.ஜனநாயக சர்வதிகாரி |
| 2.சந்திரமோகன்(சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்) | 2.இன்பஒளி |
| 3.ஒர் இரவு | 3.அம்பாள் கடாட்சம் |
| 4.வேலைக்காரி | 4.நீதிதேவன் மயக்கம் |
| 5.பாவையின் பயணம் | 5.நன்கொடை |
| 6.சொர்க்கவாசல் | 6.கண்ணிர்துளி |
| 7.காதல்ஜோதி | 7.இரக்கம் எங்கே |
| 8.நல்ல தம்பி | 8.கல் சுமந்த கசடர் |
| | 9.ராகவாயணம் |
| | 10.புதிய மடாதிபதி |
| | 11.ரொட்டித்துணடு |
| | 12.கண்ணாயிரத்தின் உலகம் |

அண்ணா நாற்பது நாடகங்களை எழுதியதாக தகவல்கள் கிடைக்கின்ற போதும் அவரது இருபது நாடகங்களே அச்சில் கிடைக்கின்றன. இத்தகைய நாடகப் பனுவல்களில் அரசியல் பேசிய அரசியல் நாடகங்களும், சமூக மறுமலர்ச்சி பேசிய சமூக நாடகங்களும் மேற்குறிப்பிட்ட நாடகங்களுள் அடங்குகின்றன. இவை எம்மவர் முன் எம்மவரை பாத்திரமாக கொண்டு வசனம் பேசி நடிக்கும் நாடகங்கள் ஆகும்.

அண்ணாவின் நாடக எழுத்துருக்கள் இதுவரை காலமும் இருந்து வந்த நாடக எழுத்துருக் கட்டமைப்பில் இருந்து மாறுபட்டது. தென்னிந்தியச் சூழலில் நாடகம் என்பது புராண இதிகாச கற்பனை சமயக் கதைகள் நாடக எழுத்துருக்களாக இருந்த போக்கினை மாற்றி நமது பண்பாட்டில் நமது மக்களின் கதைகளை சமூக விடுதலைக்கான கருகட்டமைப்புடன் நாடகங்களாக எழுதியவர்.

இவரது நாடகங்களின் தலைப்புக்களும் அதில் உறவாடும் பாத்திரங்களும் ஆமானுச சக்தியில் இருந்து விலகி சமூகத்தில் உலாவுகின்ற சாதாரண பாத்திரங்களாகும். அப்பாத்திரங்கள் சொல்லும் செய்தி, அதன் வலிமை நடிப்பினூடாக அது வெளிப்படுத்தப்படும் போது அதன் தாக்கம் சமூகத்திற்கு தேவையான கருத்துருவ எண்ணக்கருக்களாக இருந்தன.

அறிஞர் அண்ணா தமது நாடகப் படைப்புகள் மூலம் ஒரு பேர்னாட்ஷ, இப்சனை போல போற்றப்பட்டார்' (சேரன்இ மு. 1996-290)

**அண்ணாவின் நாடக எழுத்துருக் கட்டமைப்பு**

நாடகம் ஆரம்ப காலங்களில் இலக்கியமாக பார்க்கப்பட்டு பின்னர் அது நிகழ்த்துகையாக மாற்றப்பட்டது. நிகழ்த்துகையாக பார்க்கப்பட்டதன் பின்னர் நாடக எழுத்துருக் கட்டமைப்பு மிக ஆழமான பண்புகளைக் கொண்டு வெளிவந்தன. இது நிகழ்த்துகை பிரதி அல்லது பனுவல் எனவும் அழைக்கப்பட்டது.

இத்தகைய எழுத்துருக்கட்டமைப்பைப் பின்பற்றி நாடகங்கள் எழுதப்பட்டாலும் ஒர் எழுத்துருவிற்கு இருக்க வேண்டிய நாடகவியல் சார் வரன்முறைகள் இன்றியமையாதது. நாடக வரலாற்றினை ஆரம்ப கால வரலாறுகளில் இருந்து உணரலாம். கிரேக்கத்தில் நாடக எழுத்துருப்படைப்பு பல படிமுறைகளைக் கொண்டிருந்தன என அரிஸ்ரோட்டில் குறிப்பிடுகின்றார். அவை ஓர் நாடகத்தை வளர்த்துச் செல்ல உதவுபவை, கீழைத்தேய அல்லது ஆசிய நாடக மரபிலும் இதன் செல்வாக்கு உணரப்படுகின்றது. சமஸ்கிருத நாடக இலக்கண மரபும் ஐந்து படிமுறைக் கட்டமைப்பை கொண்டு அமைந்ததாகக் காணப்படுகின்றன. அண்மைக்கால நவீன நாடகங்கள் பல்வேறு விதமான கட்டமைப்புக்களைப் பின்பற்றி நாடகப் பனுவல்களை உருவாக்கும் முறைமையை கையாண்டு வருகின்றன. இத்தகைய வரலாற்றுப் பின்புலத்திலிருந்து அண்ணாவின் நாடக எழுத்துருவாக்க கட்டமைப்பை நோக்குதல் அவசியமாகின்றது.

**நாடகக் கதையும் கருவும்**

நாடகக் கதை என்பது நியமமான ஒன்றாகவோ, அன்றேல் சம்பவம், பிரச்சனை நெருக்கடிகள், சவால்கள் சார்பானவையகவோ அமையலாம் அவற்றின் கரு வெளிப்படாமல் மறைமுகமாக இருக்க வேண்டும். இனங்காணப்பட்ட அண்ணாவின் நாடகங்களில் இத்தகைய கதை அமைப்புகளே பேணப்படுகின்றன. அவரது எழுத்துருவில் இனங்காணப்பட்ட இருபது நாடகங்களும் சிறந்த கதை அமைப்பையும் உள்ளுறைந்திருக்கும் கருக்கள் மக்களின் வாழ்க்கைச் சம்பவங்களாகவும் மானிட நிவேதனத்தின் வழிகளை மக்களுக்கு எடுத்துக்காட்டுவனவாகவும் அமைந்திருக்கின்றன.

அவரது முதலாவது நாடகமான சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் (சந்திரமோகன்) நாடகத்தில் “பச்சை எனும் தீண்டாமை பாத்திரம் தாக்கம் பரவியதோடு தொடங்கி சிவாஜி என்ற பாத்திரத்தினூடாக மறுமலர்ச்சியை தூவி போர் வெற்றி என்பதற்கு அப்பால் கல்வி அறிவு அதன் வெற்றி முக்கியம் என்பதனை மோகன் என்னும் பாத்திரத்தின் அறிவுரைகளுக்கூடாக சிவாஜி பாத்திரம் மோகனையும் இந்துவும் மாலை சூட்டி திருமணம் செய்து சாதி பேத போராட்டம் அற்ற இந்து நாட்டை அறிவு பூர்வமாகக் கட்டமைக்க வேண்டும்” என இந்நாடகம் நிறைவுபெறுவது இங்கு சுட்டிக்காட்டுத்தக்கது.

அண்ணாவின் ஒவ்வொரு நாடகங்களும் புதுகதைக் கருக்களைக் களமாக்கி பாத்திரமாக்கி மக்கள் மத்தியில் மறுமலர்ச்சி எண்ணக்கருக்களை விதைத்தன. நாடக எழுத்துரு மூலம் சொல்ல

வருகின்ற மூல விடயம் கருப் பொருளாகும் அது வெளிப்படையாகவோ உள்ளுறையாகவோ அமைந்திருக்கலாம் ஆனால் அது எப்பொழுதும் தெளிவாக இருத்தல் வேண்டும். இத்தகைய பின்புலத்தில் தான் பேரறிஞர் அண்ணா தனது நாடக எழுத்துருக்களில் கருப்பொருளை அமைத்து இருக்கிறார். இக்கருப்பொருட்கள் திராவிட மறுமலர்ச்சியை சமூகங்களுக்கு பறைசாற்றுவனவாகவே அமைந்திருக்கின்றன.

**களம்**

நாடகக் கட்டமைப்பை பொறுத்தவரை பேரறிஞர் அண்ணாவினால் அங்கம், களங்களாக, காட்சிகளை இணைத்து எழுதும் முறை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. நாடகத்தில் களம் என்பது நிகழ்த்துகை அல்லது ஆற்றுகை நடைபெறும் இடத்தை குறிப்பது ஆகும். இவ்விடத்தை காட்சிகள் ஆக்கி இடத்தில் இருப்போர் அல்லது உறுப்பினர்கள் யார் எனக் கூறி நாடகத்தை நகர்த்தும் முறையானது நாடக நெறிமுறைக் கூறுகளாகும். இதனை நாம் அண்ணாவின் நாடகப் பனுவல்களில் தெளிவாக இனங்காண முடியும்.

**விடயம் அல்லது விடயப் பொருள்**

நாடக எழுத்துருவின் மூலம் சொல்ல வந்த பொதுவான விடயம் விடயப் பொருளாகும். அண்ணாவின் ஒவ்வொரு நாடகக் கதைகளிலும் இத்தகைய விடயப் பொருட்களை காணமுடியும். எடுத்துக்காட்டாக சந்திரமோகன் சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் என்னும் அவரது நாடக எழுத்துருவில் நாடக விடய பொருளாக இனம் காணப்பட்டது "மராட்டியத்திலே ஏற்றி வைக்கப்பட்ட விடுதலை விளக்கு புதியதோர் எழுச்சியை உண்டாக்குகின்றது மாவீரன் சிவாஜி கிளம்பினான் சீறி போரிட சிதறி ஓடினர் எதிரிகள் விடுதலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கை பிறந்தது ஆனால் சமூகம் சாதி பேதம் என்னும் சனியனுக்காளாகி அவதிப்பட்டது வீரர்கள் விடுதலைப் போரை நடாத்தினர் வீணர்கள் சாதியையும் மதத்தையும் காட்டிக் கொடுத்தனர்"(மெய்யப்பன்.ச. 1999.09.10)

இவ்வாறே அவரது நாடகப் பனுவல்கள் ஒவ்வொன்றிலும் விடயம் அல்லது விடயப் பொருள் பொதிந்திருப்பதை அவரது நாடகப் பனுவல்களுக்கூடாக அவதானிக்க முடியும்.

**கதைப்பின்னல்**

நாடக நிகழ்வுகளின் தொடர் அமைப்பு கதைப் பின்னல் ஆகும் இது காரண காரிய ரீதியானதும் தர்க்கரீதியானதுமாக ஒவ்வொரு நிகழ்வையும் அடுத்த கட்ட நிகழ்வுக்கு அழைத்துச் செல்வதான தொடர்ச்சியின் வடிவமாகும். இது நேரடியாகவே தெரியும் கதை பின்னல் மறைமுகமாக தெரியும் கதைப்பின்னல் என இருவகையில் செயல்படும். அண்ணாவின் நாடகங்களில் கதைப்பின்னல் நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளித்தெரிவன. ஆதனை அவரது ஒவ்வொரு நாடகங்களிலும் அவதானிக்க முடியும். இதில் ஓர் இரவு, வேலைக்காரி என்னும் இரு நாடகங்களிலும் கதைப்பின்னலானது மறைமுக தன்மையில் உருவாக்கப்பட்டு இருப்பது அவரது நாடகவியல் ஆளுமையினை வெளிப்படுத்தும் சான்றாக அமையும். இங்கு கதைப்பின்னல் காட்சி ரீதியாக ஒன்றன்பின் ஒன்றாக கதைக்கருவிற்கு ஏற்ப பின்னப்பட்டு பார்வையாளர்களின் பதிற்குறிகளை கவனத்தில் கொண்டும் உருவாக்கப்பட்டிருப்பது சிறப்பம்சம் எனலாம்.

**கட்டமைப்பு**

ஒரு நாடகக் கதைக்கான பௌதிக நிகழ்வுகளை அல்லது சம்பவங்களை ஒன்றன்பின் ஒன்றாக கோர்த்து செல்வது நாடகக் கட்டமைப்பு எனப்படும். இது நாடக எழுத்துரு ஒன்றின் சட்டகம் எனவும் குறிப்பிடப்படும்.

ஒரு நாடக எழுத்துரு அதன் பண்பு நிலைகளில் நியம அரங்குஇ நியமமில் அரங்கு என்ற இரு பகுதிக்குள் அடங்கிவிடும். இதில் நியம அரங்கு ஒன்றில் நாடக எழுத்துருவாக்க கட்டமைப்பானது ஆரம்பம், சிக்கல், வளர்ச்சி, உச்சம், முடிவு எனவும் அமையும். நியமமில் அரங்கில் சம்பவங்களின் கோர்வையாக அமையும் கதை வளர்ந்து செல்லப்படும் போது எதிர்பார்ப்பு நிலையை பதட்டத்தினை கதியினை வளர்த்து செல்லும் ஒன்றாகவும் காணப்படும்.

இத்தகைய நாடகக் கட்டமைப்பு முறை அண்மைக்கால அரங்கில் எழுத்துருக்களில் மிகச் சிறப்பாக கையாண்டிருப்பதை அவதானிக்க முடியும். நவீன நாடக எழுத்துருக்களில் இதன் தாக்கத்தை கூடுதலாக உணர முடியும். ஆனால் நாடகவியல் எண்ணக்கரு வளர்வதற்கு முதலே இத்தகைய சிந்தனை ஓட்டத்தை தனது எழுத்துருக்களில் கையாண்டு தனது நாடக எழுத்துருவை உருவாக்கி இருக்கின்றமையால் பேரறிஞர் அண்ணா அவரது நாடகங்களில் நாடகக் கட்டமைப்பு பின்பற்றப்பட வேண்டிய இரு நிலைகளும் கையாளப்பட்டிருப்பினும் மிகக் கூடுதலாக அவரது சம்பவங்களின் கோர்வையாக நாடகத்தை வளர்த்துச் செல்லும் விதம் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. ஓர் இரவு, வேலைக்காரி போன்ற பிரதிகள் நியம அரங்க கட்டமைப்பைப் பேண ஏனைய பிரதிகள் பெரும்பாலும் சம்பவங்களின் கோர்வையாக வெளிப்பட்டு நிற்பதனை அவதானிக்கலாம்.

**நாடகத்தில் மோதுகை/ சிக்கல்**

நாடகத்தில் சிறு மோதுகை, பெரு மோதுகை என்ற பண்பை நாடக எழுத்துருவில் காட்டி சிறு மோதுகை ஒன்று பெரியதாக பல வழி நடிப்புச் சித்தரிப்பை ஒன்றுபடுத்தி அதனூடாக ஓர் முடிவை அல்லது இலக்கை அடைகின்றதை அண்ணாவின் நாடகங்களில் காணலாம். பெரு மோதுகைகள் நாடகத்தின் உச்சத்தில் தொடங்கி வளர்ந்து சென்று படிப்படியாக தனது நிலையை அடையும்.

மோதுகை அல்லது நாடக சம்பவத்தில் சிக்கல் இல்லாமல் நாடகம் வளர்ந்திருக்க முடியாது. இது ஓர் நவீன நாடகவியல் எண்ணக்கரு கட்டமைப்பாயினும் இதனை அண்ணா தனது நாடக எழுத்துருக்களிலும், நிகழ்த்துகைகளிலும் கையாண்டுள்ளார்.

**அண்ணாவின் நாடகங்களில் நாடகவியல் நுட்பமுறைகள்**

நாடகவியல் நுட்பமுறை என்பது பிரதி உருவாக்கத்திலிருந்து அந் நாடகம் நிகழ்த்துகை ஆக்கப்படும் வரை கையாளப்படும் அரங்கவியல் சார் அணுகுமுறைகளை நாடகத்தில் பிரயோகிக்கும் போது உருவாகும் உருவ உள்ளடக்க வடிவ ரீதியான அணுகுமுறைகள் அனைத்தையும் நாடகவியல் நுட்பமுறை எனக் குறிப்பிடலாம்.

பேரறிஞர் அண்ணா தமிழர்களை ஓர் அடையாள உலகிற்கு காட்டியவர். தமிழ் நாடு என உயர்ந்து நின்ற பெயர் அண்ணாவின் செயற்பாடுகளால் பெறப்பட்டது. நவீன தமிழ்நாட்டின் மொழி, பண்பாடு, கலைகலாசார நடவடிக்கைகள் யாவும் ஓர் மாற்றுச் சிந்தனை மரபினூடாக எழுச்சி பெற்றது. இத்தகைய எழுச்சிக்காக நாடகத்தை ஒரு கருவியாக கையாண்டவர். அண்ணாவின் நாடகங்கள் பிரதியாக்கச் செயற்பாட்டிலும் நிகழ்த்துகை சார்செயற்பாட்டிலும் புதிய சிந்தனைப் போக்கினை அறிமுகப்படுத்தியது. இத்தகைய சிந்தனைகள் சமூக மாற்றத்தையும் சமூக விடுதலையையும் பதிய அரசியல் சித்தாந்தத்தையும் தமிழ் நாட்டுக்கு

அறிமுகம் செய்தது. நாடகவியல் அணுகுமுறை என்கிற பொழுது முதலில் பிரதியாக்க(பனுவல் உருவாக்கம்) செயற்பாடு தமிழ்நாட்டுக்குரிய தனித்துவமான பண்புகளில் வளர்ந்தது.

அண்ணா நாடகப் பனுவல்களை எம்மவர் மொழிகளில் எம்மவர் கதைகளாக சுதந்திரத்திற்காகவும் சமூக விடுதைக்காகவும் அரசியல் பிரவேசத்திற்காகவும் எழுதினார். இவரால் எழுப்பட்ட நாடகங்கள் நாடக இலக்கண மரபைப் பேணியது. கதை கரு பாத்திரம் சொல்லாடல் அங்கம் களங்களாகப் பிரித்தல் விடயம் சார் பொருள் மோதுகை முரண் என பிரதியாக்கக் கட்டமைப்பை நவீன நாடக சிந்தனையின் பால் தனது நாடகப் பனுவல்களுக்கூடாக அனுகியவர்.

அண்ணா அவர்களின் நாடகத்தின் மூலம் ஓர் புதுமையை ஏற்படுத்தினார். அந்த நாடகத்தைக் கண்டு தலை சிறந்த எழுத்தாளரும் 'கல்கி' இதழின் ஆசிரியருமான திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அண்ணாவிற்கு 'தென்னாட்டு பேர்ணாட்ஷh' என்ற சிறப்புப் பெயரை வழங்கினார்.(பிரபா, பங்காரு.1970-29)

ஓர் நடிகராக தன்னை இணைத்துக் கொண்டார் அண்ணா. அவரது சந்திரோதயம்இ ஓர் இரவு போன்ற நாடகங்களில் நடிகராகவும் இருந்து நடிப்பு வாண்மை விருத்தி உடையவராக தன்னை அடையாளப்படுத்தி நின்றார். பேச்சுவழக்கு, நயனஉரை, உவமை, உருவகம், வாத எதிர்வாதம், வருணனை முதலிய பல வித மொழி நடை உத்திகளை நடிப்பு பாவ செயற்பாடுகளுக்கூடாக பிரயோகித்தார்.

சந்திரோதயம்(மகேந்திரன்ஜமின்தாராகவும்) சந்திரமோகன்(காகபட்டர்) நாடகத்தில் பாத்திர நடிப்பு பற்றி தி.க.சண்முகம் எழுதும் போது 'இது கதையமைப்பில் கருத்தூட்டும் திறத்தல் நடிப்பால் ஒரு திருப்பு முனையாக அமையும்' என்றார். இவரது கருத்தில் இருந்து நாடகத்தில் கதை நடிப்பினூடாக வளர்த்தெடுக்கப்படும் எனக் குறிப்பிடலாம். தி.க.சண்முகம் அண்ணாவின் நடிப்பை வியந்துள்ளார்.

'தமிழுக்கு ஒரு டிக்கன்ஸ்

கோல நடைக்கொரு கோல்ட்ஸ்மித்

உணர்ச்சியை உலுக்க ஒரு விக்டர்ஹியூகோ

உரையாடலுக்கு ஓர் nஷரிடன்

கேலிக்கு ஒரு மோலியர்

பேச்சுக்கு ஒரு பாக்

எளிமைக்கு ஒரு எமிலி ஜோலா'

(சண்முகசுந்தரம்,சு.(2001)இபக்-68)

இவரது நாடகப் பனுவல்களுக்கூடாக நடிப்பை அவதானிக்கின்ற போது நடிப்பு நம்பத்தன்மையான ஆள் மேற்கொள்ளல் செயற்பாடாக அமைந்துள்ளது. வில்லன் வில்லனாகவும் கதாநாயகன் குணச்சித்திர வேடம் தாங்கியும் கோமாளி நகைச்சுவையூட்டும் நடிப்பிற்கூடாகவும் வெளிப்படுத்தி நடிப்பது இங்கு இனங்காணத்தக்கது. நடிப்பே நாடகமாகிறது. அதனைக் கொண்டு தான் நாம் எழுதும் கதை பார்வையாளரைச் சென்றடையும் என்ற கருத்து அண்ணாவின் நாடக பிரதியாக்கத்திலும் நிகழ்த்துகைகளிலும் நடிப்பு செல்வாக்குடையதாக இருந்ததை நிரூபிக்கும் சான்றாக இருந்தது.

இன்றைய நவீன நாடகவியல் நடிப்பு முறைகளில் மனோரதிய இயற்பண்பு யதார்த்த போக்கை அடிப்படையாகக் கொண்டு நடிப்பை வெளிப்படுத்தத்க்க பிரதிகளை அவர் உருவாக்கியிருக்கின்றார். காட்சியமைப்பு ஒளியூட்டல் இசை போன்ற நாடகவாக்க நுட்ப முறைகள் இவரது நாடகங்களில் இனங்காணத்தக்கதாக இருந்தன. காட்சி களம் நிலமை உறுப்பினர் என்ற அடிப்டையில் காட்சிகளை வகுத்திருப்பது நாடகவியல் அம்சங்களை அண்ணா கையாண்டிருப்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவரது நாடகங்கள் நன்கு வடிவமைக்கப்பட்ட நாடகங்களாக உருமைக்கப்பட்டிருப்பது சிறந்த காட்சியமைப்புப் பண்பைப் பேணும் வழிமுறைகளாகும்.

இவரது நாடகங்கள் அனைத்தும் மூன்று பக்கம் அடைக்கப்பட்ட ஒரு பக்கப் பார்வையாளர்களைக் கொண்ட மேடைக்காக எழுதப்பட்டவையாக இருப்பதனால் திரைச்சீலைகள், முன்திரைக்காட்சிகள், பின்திரைக்காட்சிகள் மேசைகள், கதிரைகள், தட்டிகள், கைப்பொருட்கள் கையாளப்பட்டது என்பது நாடக எழுத்துருக்கூடாகவும் நிகழ்த்துகைக்கூடாகவும் கண்டறியப்பட்டது.

இசையைப் பொறுத்தவரைக்கும் கரு இசை, முன்னோக்கு இசை, பின்னோக்கு இசை கையாளப்பட்டிருப்பது என்பதும் இங்கு அவதானிக்கத்தக்கது. எனவே ஒரு சிறந்த நவீன நாடக இலக்கண மரபு தரும் பல அரங்கவியல் பரிமாண நுட்பமுறைகள் அண்ணாவின் நாடகங்களுககூடாக இனங்காணப்பட்டிருப்பது அவதானிக்கத்தக்கது.

**முடிவுரை**

C.N.அண்ணாத்துரை அவர்களால் எழுதப்பட்ட நாடகப்பனுவல்கள் நிகழ்த்தப்படுவதற்காக எழுதப்பட்டவை என்பதும் அது நிகழ்துகைக்குரிய முழு அரங்கியல் கூறுகளையும் அது சார் அழகியல் அம்சங்களை கொண்டுள்ளது என்பதும் இவரது நாடகங்கள் இன்றைய நவீனநாடகவியல் சார் அணுகுமுறைக்கூடாக வெளிவந்தவை என்பதும் ஒரு முழுமையான நாடகவாக்கக் கட்டமைப்பைப் பேணியது என்பதும் இவ்வாய்வினூடாக நிரூபிக்கப்படுகின்றது.

காலனிய ஆதிக்க சக்திகள் விதைத்து விட்டுச்சென்ற தீய செயற்பாடுகளை சமூக மறுமலர்சிக்காக சமூக மறுமலர்ச்சி சார் கதைகளாக உருவாக்கி அதனை மேடையிட்டு அதன் வாயிலாக சமூக மாற்றத்தைக் கொண்டுவந்தமை அண்ணாவின் நாடகங்களுக்கூடாக கிடைத்த வெற்றியாகும்.

ஆரங்கே சமூக விடுதலையாகியது, அரங்கே கட்சியானது, அரங்கே ஆட்சியைக் கொண்டுவந்தது, அரங்கே கல்வியாகியது, அரங்கே தளை நீக்கத்தை தந்தது, அரங்கே சாதி பேதத்தை மறுத்தது, அரங்கே சுய உணர்ச்சியை ஏற்படுத்தியது, அரங்கே மறுமலர்ச்சி விடுதலையாகியது.

**உசாத்துணைகள்**

1.அண்ணாத்துரை,சி.என்(1971),அண்ணாவின்நாடகங்கள்,பரிமளம்பதிப்பகம்,

சென்னை.

2.கணேசன், சி,(1980)இ அண்ணா எனும் இலக்கியவாதி, மதவி பதிப்பகம்.

*3.சண்முகசுந்தரம், சு.(2001), அறிஞர் அண்ணா, சாகித்திய அக்கடமி, புதுடில்லி.*

*4.சக்திப்பெருமாள், எஸ்.(1989),தமிழ் நாடக வரலாறு, வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை.*

*5.சேரன், மு.(1996),இந்திய நாடகம் ஓர் கூர்ந்த கண்ணோட்டம், சேரன் பதிப்பகம், சென்னை.*

*6.துரைக்கண்ணன், நா. (1976),தமிழில் நாடகம், சென்னை.*

*7.மருதவாணன்,சா. (1984),அண்ணா ஒரு பல்கலைக்கழகம், அம்மன் புக் கம்பெனி, கோவை.*

*8.மழைமலையான், சு. (1967),பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு, வாணி பதிப்பகம், சென்னை.*

*9.மெய்யப்பன், ச. (1998),சந்திரமோகன், மணிவாசர் நூலகம், திருச்சி.*

*10.வேலுச்சாமி, ந. (1992),அறிஞர் அண்ணாவின் சிந்தனைகள், தமிழ்த்துறை, ஈரோடு.*

*11.Enxcyelopaedia of world drama.*

*12.Philip Auslander,(2008),Theory of Performance Studies, A Student's Guide,Routleddge London an New York.*

*13.Rangacharya,A.(1980),The IndianTheatre.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com